நாள் 06.12.2023.

அசல் வழக்கு எண் 60/2021

பி வா 1 கந்தசாமி

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

ஆவுடையப்பன் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல்செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை தயார் செய்வதற்கு நான்தான் விவரம் சொன்னேனா என்றால் ஆமாம். 1, 2 பிரதிவாதிகள் எங்கள் ஊரைச்சார்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் பாடலிங் கம் மற்றும் பாலசுப்பிரமணியனுக்கும் சேர்த்்து சாட்சியம் அளிக்கிறேனா என்றால், கோயிலுக்காக சாட்சியம் அளிக்கிறேன். எந்த கோவிலுக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் குலசேகரநங்கையம்மன் கோவிலுக்காக சாட்சியம் அளிக்கிறேன். கோவில ஊருக்கு வடக்கே ஊர் எல்கையில் ஒதுக்குப்புறமாக உள்ளது என்றால் சரிதான். அந்த கோவிலை சுற்றி வயல்கள் உள்ளது என்றால், 2 பேருக்கு வயல் உள்ளது சுடுகாடு செல்வதற்கு வழியும் அதில் இருக்கிறது. அந்த இரண்டு பேர் யார் யார் என்றால், வாதி ஆவுடையப்பனுக்கும் முருகனுக்கும் இருக்கிறது. சுடுகாட்டுக்கு செல்வதற்கு ஊரில் இருந்து 2019 ல் ஒரு தார் சாலை அமைக்கப்பட்டது என்றால் சரிதான். அப்போது இருந்த களக்காடு டவுண் பஞ்சாயத்தால் போடப்பட்டது என்றால் அது எனக்கு தெரியவில்லை. ஆனால் ரோடு போட்டிருக்கிறார்கள். அரசாங்கம்தான் ரோடு போட்டது என்றால், அது எனக்கு தெரியாது. நாங்க்ள் ஊரில் இருந்து ரோடு போட்டோமா என்றால் இல்லை. கோவிலை சுற்றி பெரிய மதில் சுவர் இருக்கிறது

என்றால், உள் காம்பவுண்ட் சுவரும் வெளி யே ஆட்கள் போவதற்கு பாதையும் இருக்கிறது. கோவிலை சுற்றிதான் தார் சாலை போடப்பட்டிருக்கிறது என்றால் இல்லை. தற்போது வரை கோவிலை சுற்றி தார் சாலை போடப்படவில்லையா என்றால், போடவில்லை. கோவிலுக்கு கீழ்பக்கம் ஒரு கிணறும் ஒரு மேல்நிலை நீர்தேக்க தொட்டியும் இருக்கிறது என்றால் இல்லை. அவ்வாறு எந்த கிணறும் நீர் மேல்நிலை தொட்டியும் இல்லை என்று சொல்லுகிறேனா என் றால் ஆமாம். நான் எனது எதிர்வழக்குரையிலோ, அல்லது முதல்விசாரணை வாக்குமூலத்திலோ கோவிலை சுற்றி தார் சாலை இல்லை என்ற விவரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் அது தவறு சொல்லியுள்ளோம். கோவில்யாரால் உருவாக்கப்பட்டது என்றால், அது தெரியாது அந்த காலத்தில் இருந்தே இருக்கிறது. கோவிலுக்கு என்று சொல்லி ஒரு கமிட்டியோ, நிர்வாகிகளோ, சங்கமோ தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். கோவில் எந்த சர்வே எண்ணில் எவ்வளவு இடத்தில் உள்ளது என்றால், சர்வே எண் 714 ல் உள்ளது அதன் விஸ்தீரணம் 79 செண்ட் ஆகும். சொத்து சம்பந்தமாக யார் பெயரிலாவது பத்திரமோ பட்டாவோ பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. சர்வே எண் 714 வருவாய்த்துறை ஆவணத்தில் சர்க்கார் புறம்போக்கு என்றுதான் இருக்கிறது என்று சொன்னால் இல்லை. எனக்கும் ஆவுடையப்பனுக்கும் தனிப்பட்ட விரோதம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். கோவிலுக்கு வடபக்கம் முருகன் என்பவரின் வயலும் கீழ்பக்கம் ஆவுடையப்பனின் வயலும் உள்ளது என்றால் சரிதான். மேல்பக்கம் யார் வயல் இருக்கிறது என்றால், அது சுடுகாடுக்கு செல்லும்

வழி இருக்கிறது. கோவிலை சுற்றியுள்ள பாதை வழியாகவும் பொதுமக்கள் சென்று வரலாம் என்றால், அவ்வாறு செல்வதில்லை. பாதையை சுற்றிதான் வேலி அமைக்க நாங்கள் நடவடிக்கை எடுத்து வந்தோம் என்று சொன்னால், வேலி முன்பே இருக்கிறது. வேலி உள்ள விவரத்தை எனது எதிர்வழக்குரையிலோ, முதல்விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளோமா என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. வேலி உள்ள விவரமும் கோவிலை சுற்றி தார்சாலை இல்லை என்ற விவரமும் குறுக்குவிசாரணையில்தான் பொய்யாக சொல்லுகிறேன் என்றுசொன்னால் அது தவறு. முருகன் என்பவர் கோவில் சுற்றியுள்ள பாதையை ஒட்டி அவரது நிலத்தில் ஒரு கேட் அமைத்ததாக இரண்டு நாட்களாக ஊரில் தகராறு ஏற்பட்டு வருகிறது என்று சொன்னால், அவ்வாறு தகராறு எதுவும் இல்லை. கேட் அவருடைய இடத்தில் இல்லை. கோவில் இடத்திலாவது முருகன் கேட் அமைத்திருக்கிறாரா என்றால் இல்லை. கோவில் இடத்தில் முருகன் என்பவர் கேட் அமைத்தாக சொல்லி 1ம் பிரதிவாதி பாடலிங்கம்தாஸ் காவல்நிலையத்தில் புகார்கொடுத்து விசாரணை நடைபெற்று வருகிறது என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. அவ்வாறு முருகன் கேட் அமைத்துவிட்டதாக சொல்லி நாங்கள் 10 அடியாட்கள் துணையுடன் நேற்று கோவிலை சுற்றியுள்ள பாதையை சுற்றி வேலி அமைத்தும் கேட்டும் அமைத்துள்ளோம் என்று சொன்னால் இல்லை. எங்கள் மூன்றுபேர் மீதும் எங்கள் உடன் வந்தவர்கள் மீதும் வாதி ஆவுடையப்பன் களக்காடு காவல்நிலையத்தில் நேற்று 4.12.23 அன்று புகார் கொடுத்து மனுவின்பேரில் மனு ரசீது எண் 1902/2023 கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது.

மேற்படி மனு விசாரணையில் இருந்து வருகிறது என்றால், எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் சிவன் கோவில் இருக்கிறதா என்றால் இருக்கிறது. அந்த கோவில் செயல் அலுவலர் என் மீது களக்காடு காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் அவ்வாறு கிடையாது. நானும் 1, 2 பிரதிவாதிகளும் கோவில் பெயரை சொல்லி இடத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்து வருகிறோம் என்று சொன்னால் இல்லை. கோவிலை சுற்றியுள்ள பாதையை வாதி உட்பட பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் இல்லை. பொதுமக்கள் பயன்படுத்தவில்லை. எனக்கு ஆவுடையப்பன் கோவிலை சுற்றியுள்ள பாதையை பயன்படுத்துவதற்கு ஆட் சேபனை இருக்கிறதா என்றால், ஆட்சேபனை உள்ளது. அவருக்கு வயலுக்கு செல்வதற்கு வேறு வழி இருக்கிறது. கோவிலுக்கு செல்லும் இடம் ஆகும். கோவில் புறம்போக்கு இடத்தில் உள்ளது என்றும் அதனால் அந்த பாதையை யாரும் பயன்படுத்தக்கூடாது என்று சொல்வதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால்ச ரியல்ல-